REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்.அண்ணுதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 30உ திங்கள் (15—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 1உ செவ்வாய் (16—11—54) [இதழ் 132

மாவ் மாவ் தலைவருக்கு மரண தண்டனை

கென்யாவிலுள்ள மாவ் மாவ் இயக்கத் தலைவர்களில் முதன்மையானவர் எனப்படும் டிடு மார்ஷல் கலிபா வுக்கு கென்யா நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்தது.

சட்டவிரோதமாக ரிவால்வர் ஒன்றை அவர் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. இவருடன் இதே முறையில் குற்றம் சாட்டப்பட்ட இரு ஆப்பிரிக்கர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

வருகா சாங்வலி என்ற இளம் பெண் ஒருவருக்கு, 'கவர்னர் விரும்பும் வரை சிறை வைத்திருக்க வேண்டும்,' என்று உத்தரவிடப்பட்டது.

சென்ற மார்ச் மாதத்தில் மாவ் மாவ் இயக்கத்தினை சரண் அடையச் செய்ய தான் முயன்று தோல்வி அடைந்ததாக, கலிபா நீதிமன்றத்தில் கூறினார்.

சட்டப் பிரச்சினையின் மீது வழக்கை அப்பீல் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டது.

அடிமை சாசனம் எழுதியது கிடையாது

திருப்பூரில் அண்ணு

தி. மா. மு. கழக ஆண்டு விழாவில் பேச்சு

திருப்பூர் திராவிடமாணவ முன்னேற்றக் கழக மூன்ரும் ஆண்டு விழா 14-11-54 ஞாயிறு காலை 10 மணியளவில் துவங்கிற்று.

நகர மாணவர் கழகச் செயலாளர், பொதுச் செயலாளர் அண்ணுதுரை, ஈ. வெ. கி. சம்பத், அ. பொன்னம்பலஞர் ஆகியோர்களை வரவேற்றுப் பேசியதும், திரு. முத்து—இரத்தினம் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றினர்.

மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளர் அ. ச. இளங்கோ சிறிது நேரம் மாணவர் கழகத்தின் மூன்ருண்டு சேவை குறித்து விவரித்துப் பேசினர்.

பின்னர் அ. பொன்னம்பலஞர் அவர்கள் தி. மு. கழகத்தின் மறுமலர்ச்சிப் பாதையைக் குறித்து விளக்கிவிட்டு, மக்கள் தங்களது சாதிப் பெயர்களை, பட்டங்களை, சின்னங்களை துறந்துவிடவேண்டும் என்று கூறினர்.

இது கேட்டு உணர்ச்சி வயப்பட்ட ஒரு பார்ப்பனத் தோழர், தமது சாதிச் சின்னமான பூணூலை அறுத்து எறிந்தது குறிப்பிடத் தக்கது.

பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், மாணவர்களுக்கும் அரசியலுக்குமுள்ள தொடர்பு குறித்து அரிய உரை நிகழ்த்தியதும், பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரையும் அன்புரையும் வழங்கினர்.

பொதுச்செயலாளருக்கும் இதர தோழர்களுக்கும் நகர தி. மு. கழகம், மாணவர்கள், 13, 14-வது வட்ட தி. மு. கழகம், தொழிலாளர் பகுத்தறிவுப் படிப்பகம், முத்தமிழ் நடிக மன்றம், வள்ளலார் படிப்பகம், கமலா அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கம் முதலியவற்றின் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப் பெற்றன.

மாலை நிகழ்ச்சி

அன்று மாலை 6–30 மணிக்கு, தோழர் அ. ச. இளங்கோ தலைமையில் தோழர்கள் அ பொன்னம்பலஞர், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசியபின் பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர்கள்.

தனி நாடு கோரிக்கையைக் கைவிடவில்லை!

நாகர் தேசீயக்குழுவினர் அறிக்கை

இராஜேந்திரருக்கும் நேருவுக்கும் கடிதம் எழுதவில்லை என மறுப்பு

சுதந்திரத்தை இழக்க நாகர்கள் விரும்பமாட்டார்கள்

★

இந்தியாவின் கிழக்கு எல்லை ஓரத்தில் வாழும் நாகர்கள் இந்திய யூனியனுடன் ஒன்றுபட்டு வாழ்வதை விரும்பவில்லை என்பதையும், அவர்கள் சுதந்திரத் தனி நாடு ஒன்றை விரும்புகிருர்கள் என்பதையும் அனைவரும் அறிவர்.

புதுடில்லியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசாங்கம், நாகர்களின் தனி நாடு கோரிக்கையை ஒப்புக்கொள்ள மறுப்பதும், நாகர்களைத் தம் வசப்படுத்த வலை விசி வருவதும் பலர் அறிந்ததே.

நாகர்களின் சுதந்திரக் கோரிக்கையை அடக்க ஆங்கிலேயர்கள் எவ்வளவோ முயன்றும் தோல்வியுற்றனர் என்பது உண்மையாகும்.

இமயம் முதல் குமரி முனைவரை ஒரே குடையின்கீழ் கட்டியாள வேண்டுமென்ற எண்ணம் கொண்ட காங்கிரஸ் அரசாங்கம், நாகர்களின் கோரிக்கையை மறுக்கிறது.

நாகர்கள் வாழும் பகுதிகளில் சிலவற்றில், 'தேசீயக் கவுன்சில்கள்' என்ற அமைப்பொன்றை ஏற்படுத்தி, அவர்களை இந்திய யூனியனின் நேரடியாட்சிக்குள் கொண்டுவர முயற்சிக்கப்படுகிறது.

சென்ற சில நாட்களுக்கு முன்பு நாகர்கள் தங்களின் தனி நாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டனர் என்றும், தங்களுக்கென்று தனி மாநிலம் ஒன்றை இந்திய யூனியனுக்குள் அமைத்துத் தருமாறு இந்திய சர்க்காருக்கு நாகர்களின் தேசீயக் கவுன்சில் கடிதம் எழுதியிருக்கிறது என்றும், இக்கடிதத்தின் நகல்கள் பண்டித நேருவுக்கும், இராஜேந்திரப் பிரசாத் அவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாயின.

இப்போது நாகர்களின் தேசீயக் கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேற்படி செய்தி தவறு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய யூனியனுக்கு வெளியில் தனி சுதந்திர நாடு அமைய வேண்டுமென்ற கோரிக்கையை நாகர்கள் கைவிடவில்லை என்று அந்த அறிக்கை கூறுகிறது.

"நாகர்கள், இந்திய யூனியனுக்குள் அமைக்கப்பட்ட மலை நாடு ஒன்றை ஒப்புக்கொண்டு திருப்தி அடைவார்கள் என்று இந்திய யூனியனின் தலைவருக்கோ, அல்லது இந்திய சர்க்காருக்கோ கடிதம் ஏதும் எழுதவில்லை," என்று நாகர்களின் தேசீயக் கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கை மேலும் கூறுகிறது.

ஆகவே, இந்தியக் கூட்டாட்சியுடன் சேராது, தனித்து இயங்கும் சுதந்திரத் தனி நாடு தேவை என்னும் தங்களது நீண்ட நாள் கோரிக்கையை, நாகர்கள் கைவிடவில்லை என்று தெரிகிறது.

'மூளை பலம்' தேவையாம்!

"ஜினீவா ஒப்பந்தப் பிரதேசங்களிலும், முக்கியமாக இந்தோ சீனுவிலும், கம்யூனிஸ்டுகள் நாசவேலைகளால் ஏற்படுகின்ற ஆபத்துக்களைத் தடுக்க வேண்டிய வழிவகைகளை வகுக்க, தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டமொன்று வெகு விரைவில் நடைபெறலாம்"

என்று, அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் டல்லஸ் கூறியுள்ளார்.

கம்யூனிஸ்டுகளால் ஏற்படும் ஆபத்துக்களைத் தடுக்கும் இவ்வேலைகளுக்கு எல்லா உறவு நாடுகளுடைய 'மூளை பலமும்,' 'பண பலமும்' தேவைப்படுகிறது என்றும் அவர் கூறியிருக்கிருராம்.

நேபாளத்தில் பாகிஸ்தானியர் பிரவேசித்தனராம்

சுமார் 1000 முஸ்லிம்கள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து, நுழைவுச் சீட்டுகள் எதுவுமின்றி நேபாளத்திற்குள் புகுந்துவிட்டிருக்கின்றனராம். இதுபற்றி அறிந்த நேபாள பிரதமர் வருத்தம் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

சமூக சேவை வெற்றி பெற...

'இழிவுகள் ஒழிய வேண்டும்'

சேலம் சமூக சேவா மாநாட்டில் வரவேற்புரை

"ஜாதிப் பிரிவினைகள், அரிசனங்கள் எனப்படுவோரிடையேயும் காணப்படும் ஜாதி வேறுபாடுகள், சிவில் உரிமைகளை அனுபவிக்க முடியாத நிலை, கருத்து வேற்றுமைகள், நம்பிக்கையில்லாத் தன்மை, சந்தேகம் இவைகள் (நாட்டில்) இன்னும் நீடிக்கின்றன; இது போன்ற இழிவுகள் நீக்கப்பட்டால்தான், சமூக சேவை என்பது வெற்றி பெற்றதாகச் சொல்ல முடியும்; மக்கள் கூட்டு முயற்சி, ஒத்துழைப்பு, சேவா உள்ளம் ஆகிய பண்புகள் கொண்டவர்களாக விளங்குமாறு செய்ய வேண்டும்,"

என்று, சேலத்தில் நடைபெற்ற சென்னை மாநில 6-வது சமூக சேவா மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவரான திருமதி சபா நாயகம் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

13—11—54 சனியன்று துவங்கிய மேற்படி மாநாட்டிற்கு சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தலைமை வகித்தார். முதல் அமைச்சர் காமராசர் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

பாக். மந்திரி சபையில் மீண்டும் நெருக்கடி?

குலாம் அலி தால்பூர் ராஜினமா?

பத்தொன்பது நாட்களாகப் பதவியில் இருக்கும் பாகிஸ்தான் புதிய மந்திரி சபையில் நெருக்கடி வளர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

முகமது அலி மந்திரி சபையில் உள்ள செய்திப் போக்குவரத்து அமைச்சர் குலாம் அலி தால்பூர், புதிய ஆட்சியிடமிருந்து தன்னை விடுத்துக்கொள்ள நேரிடும் என்று அச்சுறுத்துகிருர் என்று தெரிகிறது.

சிந்து சட்ட சபையின் எதிர்க் கட்சித் தலைவரும், அவாமி மகேஷின் தலைவருமான ஜி. எம். சையத் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டிருப்பதை எதிர்த்தே, தான் ராஜினமா செய்து விடுவதாக தால்பூர் கூறுகிருர்.

முகமது அலியினுல் விரும்பப்படும் ஐக்கிய பாகிஸ்தானை எதிர்த்து, பாகிஸ்தான் கூட்டாட்சி நாடாக இருக்கவேண்டுமென்று ஜி. எம். சையத் விரும்புவதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக அவர் வகது செய்யப்படுவதும், ஐக்கிய பாகிஸ்தானை எதிர்ப்போர் மீது அடக்குமுறைகளை வீசுவதையும் தால்பூர் விரும்பவில்லையாம்.

அவரது கட்சியினர் 25 பேர் சிந்து சட்ட சபையில் குர்ரோ மந்திரி சபையை ஆதரிக்கமாட்டார்கள் என்று தெரிகிறது.

தால்பூர் ராஜினமா செய்வார்; அல்லது டிஸ்மிஸ் செய்யப்படுவார் என்று கூறப்படுகிறது.

ராஜினமா செய்யவேண்டாமென்று குலாம் அலியின் நண்பர்கள் அவரிடம் கூறியிருக்கிருர்கள் என்று தெரிகிறது.

நகீப் பதவி பறிமுதல்

நாசரை விரட்ட சதி செய்தாராம்!

எகிப்திய குடியரசுத் தலைவர் ஜெனரல் நகிப், கர்னல் நாசர் தலைமையில் உள்ள சர்க்காரைக் கவிழ்க்க, முஸ்லீம் சகோதரத்துவக் கழகத்தார் செய்த சதியில் ஈடுபட்டிருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு, குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார் என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

நகீப் முன்பு ஒருமுறை இம்மாதிரி குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, பின்னர் இராணுவ அதிகாரிகளில் பெரும்பாலாஞேர் அவர் தொடர்ந்து குடியரசுத் தலைவராயிருக்க வேண்டுமெனக் கோரியதின் பேரில் மறுபடியும் 'சிம்மாசனம்' ஏற்றப்பட்டார் என்பது நினைவிலிருக்கலாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

விழாக் கூட்டத்தில் இருவர் கொலை

மதுபானி, நவ. 11—

கார்த்திகை பூர்ணமியை முன்னிட்டு ராம்பதி கிராமம் அருகே கமலா நதியில் சுமார் ஒரு லட்சம் பேர் மூழ்கினுர்களாம். இக்கூட்ட நெருக்கடியில், யாரோ ஒருவர், ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்துகொண்டதாகவும், இதனைக் கண்டு ஆத்திரம் கொண்ட யாத்திரீகர்கள் அந்த நபரைத் தாக்கிக் கொலை செய்துவிட்டதாகவும் தெரிகிறது.

தகாத முறையில் நடந்து கொண்ட அந்த நபருக்கு உதவ வந்த மற்றொருவரும் கூட்டத்தினரால் கொலை செய்யப்பட்டார் என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்-அண்ணாதுரை
சென்னை 15—11—1954 திங்கள்

விற்கப்படுகிறது!

நெசவாலைத் தொழிலில் இந்தியத் துணைக்கண்டம் உலகத்தில் இரண்டாவதாக இருப்பதாகும். இத்தொழிலில், முதல் உலகப் பெரும் போருக்குப் பின்னர், முதலிடத்தில் இருந்த பிரிட்டனுக்கும் ஜப்பானுக்கும் பெரும் போட்டி எழுந்தது. உலகச் சந்தைகள் அனைத்திலும் ஜப்பானுக்கும் பிரிட்டனுக்கும், இத்துறையில் போட்டி பலமாக இருந்தது. ஜப்பான் துணிகளின் குறைந்த விலையுடன், பிரிட்டனால் போட்டியிடுவது முடியாததாகிவிட்டது. இருந்தாலும் பிரிட்டனில் நெசவு செய்யப்படும் துணியைக்காட்டிலும், ஜப்பானின் துணி நீடித்த உழைப்பில் குறைந்து காணப்பட்டதால், மலிவான விலையில் அத்துணி கிடைத்தபோதிலும் மக்களிடத்தில் அத்துணிக்கு இருந்த மதிப்பு மிக மிகக் குறைந்தே இருந்தது. ஜப்பான் துணிக்கிருந்த இந்தத் தரக் குறைவின் காரணமாக, பிரிட்டிஷ் நெசவுத் துணிக்கு உலகச் சந்தையில் அதிக பாதகம் ஏற்படாமல் இருந்தது. இருந்தாலும் ஜப்பான் போட்டியைப் பற்றிய அச்சம் பிரிட்டிஷ் நெசவாலை முதலாளிகளை ஆட்டிப் படைக்காமல் இல்லை.

இரண்டாவது உலகப் பெரும் போரில் நேரடியாக பிரிட்டனும் ஜப்பானும் பங்கு கொண்டுஇருந்த காரணத்தால், அவ்விரண்டு நாட்டிலிருந்த நெசவாலைகளும், போரின் தேவைகளை நிரப்புவதில் மும்முரமாக ஈடுபடலாயின. எனவே, உலகச் சந்தையில், பிற நாடுகளின் போட்டி துளியும் இல்லாது, இந்திய நெசவாலைகள், திறந்த வீட்டில் நுழைவதுபோல் நுழைந்தன. ஆலையில் நெய்த ஆடை என்ற பெயரில் குப்பை கூளங்கள் அனைத்தையும், வைத்த விலைக்கு விற்று, உலகச் சந்தையில் கோடி கோடியாகக் கொள்ளையிட்டன. அந்நேரத்தில் ஆடை கிடைப்பதும் அருபொருளாக இருந்ததால், இந்திய ஆலை முதலாளிகள் கேட்ட அதிக விலையைக் கொடுத்து, மட்டரகத் துணிகளை வாங்கிக் கொள்ள உலகின் பல பகுதியினரும் தயாராக இருந்தனர். இந்திய ஆடைகளைத் தவிர வேறு நாட்டு ஆடைகள் கிடைப்பதற்கு மார்க்கமில்லாத நிலையில், தரத்தில் குறைந்த இந்திய ஆடைகளை, அதிக விலை கொடுத்து பிறநாட்டவர் வாங்கி உடுத்தியதில் ஆச்சரியமில்லை. அதே நெருக்கடி நிலை என்றென்றும் எதிர்பார்ப்பது முடியாது.

போர் நின்றது; திரும்பவும் பிரிட்டனிலும் ஜப்பானிலும் நெசவாலைகள் வழக்கம்போல் பணிபுரியத் தொடங்கின. போரின்போது விடுபட்டுக் கிடந்த உலகச் சந்தையில் திரும்பவும், மேற்கூறிய இரண்டு நாடுகளும் முகம் காட்டலாயின. ஆடைகள் விஷயத்தில், உலகச் சந்தையில் இந்தியா அதுவரை கொண்டிருந்த ஏகபோக உரிமை ஆட்டங் கொடுக்கத் தொடங்கி விட்டது. குப்பை கூளங்களை எல்லாம் துணியென்று சொல்லி, ஒன்றுக்குப் பத்தாக விலை வைத்து,உலக மக்கள் தலையில் கட்டி, இதுவரை கொள்ளையடித்து வந்ததுபோல், இனியும் இந்திய ஆலை அரசுகளால் கொள்ளை அடிக்க இயலாது.

இந்திய ஆலை அரசுகள், மற்ற நாட்டு ஆடைகளின் விலையைக் காட்டிலும், தங்கள் ஆடைகளை விலையில் குறைப்பதுடன், அதே நேரத்தில் ஆடைகளின் தரத்தையும் உயர்த்த முன்வர வேண்டும். அதுவுமின்றி தரத்தை உயர்த்துவதுடன், மாதிரியாகக் காட்டப்படும் ஆடையைப் போலவே, இறுதியில் விற்கப்படும் மொத்த ஆடையும் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதில் கருத்தாகவும் விழிப்பாகவும் இருந்தால் அல்லாது, எந்த வர்த்தகமும் முடிவில் அழிந்தொழிவது நிச்சயம்.

ஆனால் இந்திய ஆலை அரசுகளிடம், இந்த 'வியாபார நாணயம்' என்ற உயர்ந்த பண்பு மருந்துக்கும் கிடையாது என்பது ஏற்கனவே தெரிந்துள்ள விஷயமாகும். இந்திய ஆலை அரசுகளும், வியாபாரிகளும் வெளி நாடுகளுக்கு அனுப்பும் பண்டங்களில் செய்யும் தில்லுமுல்லுகளை, ஆங்காங்குள்ள இந்தியத் தூதுவர்கள் ஏற்கனவே அம்பலப்படுத்தி இருக்கிறார்கள். அத்துடன், அத்தகைய பித்தலாட்டங்களால் இந்தியாவின் பொது மதிப்பு மட்டமாவதோடு, எதிர்கால வாணிபமும் குறைந்துவிட ஏதுவாகும் என அவர்கள் எச்சரித்தும் உள்ளனர். இந்தியத் தொழில் அரசுகளைப் பொறுத்த வரையில், இந்தியப் பேரரசின் எச்சரிக்கை, செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்து விட்டது.

அண்மையில் வந்த தீபாவளிக்கு முன்னர், மலாயா, இந்திய ஆலைத் துணிகளைக் கொள்முதல் செய்தது. தேவையைத் தெரிவிக்கக் காட்டப்பட்ட மாதிரி ஆடைகள்போல், மொத்தமாக ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகள் இருக்கவில்லை என்று மலாயா வியாபாரிகள், அங்குள்ள இந்தியத் தூதுவரிடம் முறையிட்டுள்ளார்கள். அந்த வியாபாரிகளோ, இங்குள்ள ஏற்றுமதி வியாபாரிகளுக்கு, வேற்றுமைக்கான காரணத்தை நேரடியாக எழுத்து மூலம் கேட்டபொழுது, மாதிரி தரப்பட்ட காலை இருந்த துணி நெசவமைப்பு, கோரப்பட்ட ஆடைகளை உருவாக்குவதற்குள் மாற்றப்பட்டு விட்டதாக ஒரு நொண்டிச் சமாதானம் கூறினார்களாம், இந்திய ஏற்றுமதி 'நாணயஸ்தர்கள்'!

அடிக்கடி மாற்றும் நெசவமைப்பைக் கொண்டிருப்பவர்கள், மாதிரி துணி அனுப்பும் வழக்கத்தை மேற்கொண்டிருப்பது ஏன்? அதை ஏற்கனவே தொலைத்துத் தலைமுழுகி அல்லவோ இருக்க வேண்டும், இந்த ஆலை அரசுகள்? ஆனால், 'மாதிரி' என உயர்ந்த தரத் துணியைக் காட்டி, அதே தரத் துணியின் தேவை தெரிந்தவுடன், தரத்தில் குறைந்த துணியை அனுப்புவது என்றால், அவர்களுடைய செய்கை, நம்பிக்கை மோசடி என்பதைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்? அவர்கள் சமாதானத்தை சாதாரண அறிவு படைத்தவரும் ஒப்பார்!

அதே போன்ற குறை, ஆஸ்திரேலியாவிலிருந்தும் கிளம்பி இருக்கிறது.

இந்த நம்பிக்கைத்துரோகமான காரியம் இந்திய ஆலை அரசுகளுக்கும், பெரும் வியாபாரிகளுக்கும் பரம்பரைப் பழக்கம் என்றுதான் சொல்ல வேண்டும். இதுபற்றி, ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்னரே, காலஞ்சென்ற சர். ஆர். கே. ஷண்முகம் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியப் பஞ்சு வியாபாரிகள், மாதிரிக்காக ஒரு பஞ்சைக் காட்டிவிட்டு, மொத்த பஞ்சியின் தேவை தெரிந்தவுடன், மாதிரி பஞ்சுக்கு மாறாக, மிக மிக மட்டரகப் பஞ்சை அனுப்பியதாக, மேற்படியாரிடம், இங்கிலாந்து வியாபாரிகள் நேரில் கூறினதாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த இழிகுணம் இந்தியப் பணத்திமிங்கிலங்களிடம் இன்றும் அப்படியே இருந்து வருவதில் வியப்பில்லை. இனியும் அழியாது இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆரியக் கலாசாரத்தின் அடிப்படை இழிகுணம் அது. இந்திய வரலாறு, இதற்கு ஒரு சான்று!

ஆத்மார்த்தத் துறையில் இந்தியா என்றென்றும் உயர்ந்து காணப்படுகிறது என்றுதான், ஆரிய தாசானுதாசர் கூறிடக் கேட்டிருக்கிறோமே அல்லாது, ஒழுக்கத்தில் உயர்ந்திருக்கிறது —இருக்கிறது என்று அவர் கூறிப் பூரிப்படைய நாம் கண்டதுமில்லை — கேட்டதுமில்லை. எனவே, இந்திய ஆலை அரசுகளும்—பெரும் பெரும் வியாபாரிகளும் 'ஆத்மார்த்தத் துறையில் சிறந்தும்,' அறநெறித் துறையில் தாழ்ந்தும் காணப் பெறுவதில் வியப்பில்லை.

இந்திய ஆலை அரசுகள் வெளிநாடுகளில் மட்டரக ஆடைகளை விற்றுப் பணந்திரட்டுகிறார்கள் என்று சொல்வதைக்காட்டிலும் ஆரிய ஆத்மார்த்தத்தையும் விற்று காசாக்குகிறார்கள்— நாணயத்தையும் விற்று காசாக்குகிறார்கள் என்று கொள்வதுதான் முறையாகும்.

ஆரிய ஆத்மார்த்தம் விற்கப்படுகிறது! நாணயம் விற்கப்படுகிறது!

சீனாவில் 12 பேருக்கு மரண தண்டனை!

அமெ. - சியாங் ஏஜெண்டுகளாம்'

கம்யூனிஸ்டு சீனாவைச் சேர்ந்த பியூகின் மாகாணத்தில், ஒற்றர் வேலை செய்ததாகவும், நாசவேலை செய்ய முயன்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 12 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவர்கள் அமெரிக்க—சியாங்கின் ஏஜெண்டுகள் என்று கண்டுபிடிக்கப்பட்டனராம்.

மற்றும் பன்னிரண்டு பேர்களுக்கு பலவிதத் தண்டனையும் அளிக்கப்பட்டதாம்.

தொழில் வளர்ச்சிக்குக் கடன் உதவ புதிய நிறுவனம்!

அமைப்பு வேலை முறை குறித்து ஏ. இராமசாமி

இந்தியாவில் புதியதாக ஒரு தொழில் வளர்ச்சிக்குக் கடன் உதவி தரும் நிறுவனம் ஒன்றை அமைப்பதற்காகவும், அந்த நிறுவனத்திற்கான மூலதனம் திரட்டும் பொருட்டு, உலக பாங்கி நிர்வாகிகளுடன், 1 கோடி டாலர்கள் கடன் தருவதற்கான பேச்சு வார்த்தைகள் நடத்தும் பொருட்டும் வாஷிங்டன் சென்றிருந்த திரு. ஏ. இராமசாமி (முதலியார்) இந்தியா திரும்பியுள்ளார்.

"இந்த நிறுவனத்தைப் போலவே மக்கள் சபையும், தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒன்றைக் காணவிருக்கிறது. ஏற்கனவே தொழில் நிதி நிறுவனம் என்ற பெயரில் ஒன்றுள்ளது. இப்போது மூன்றாவதாக இந்தத் தொழில் வளர்ச்சிக் கடன் உதவி நிறுவனம் அமைக்கப்படுகிறது.

இதன் மொத்த மூலதனம் சுமார் 17½ கோடியாக இருக்கும். இதில் இந்திய அரசாங்கம் ரூ. 7½-கோடி தரும். உலக பாங்கி ரூ. 5 கோடி கடன் தரும்.

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாட்டு முதலாளிகள், எஞ்சியுள்ள மூலதனத்திற்கு கடன் வழங்குவர். இந்திய அரசாங்கம் தரும் கடன் உதவிக்கு வட்டி கிடையாது.

புதிய நிறுவனத்திற்கான அமைப்புக் கூட்டம் கல்கத்தாவில் வரும் நவம்பர் 15–ல் நடைபெறுமாம். மூலதனம் போடும் பிரிட்டிஷ் முதலாளிகளின் பிரதிநிதிகளும் அக்கூட்டத்தில் கலந்து கொள்வர்.

நிறுவனம், அடுத்த ஜனவரி முதல் வேலை துவங்கும்.

இப்போதுள்ள தொழில்களுக்கு பொருள் உதவி செய்வதும், புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு மூலதனம் கடன் தரவும் இந்த நிறுவனம் பாடுபடும்.

இத்தகவல்களை திரு. இராமசாமி (முதலியார்) தந்திருக்கிறார் எனத் தெரிகிறது.

ஐசனேவர் - பிர்லா சந்திப்பு!

இந்தியப் பொருளாதார நிலை குறித்துப் பேசினராம்

இந்திய தொழிலதிபரான பி. எம். பிர்லா, இந்தியாவின் பொருளாதார நிலை குறித்து அமெரிக்கத் தலைவர் ஐசனேவருடன் 'வெள்ளை மாளிகை'யில் 25 நிமிடம் பேச்சு வார்த்தைகள் நடத்தினர் எனத் தெரிகிறது.

பேச்சு முடிந்தபின் திரு. பிர்லா "நான் இந்தியாவின் பொதுவான பொருளாதார நிலைகள் குறித்துப் பேசினேன்; இந்த விஷயத்தில் அமெரிக்க குடியரசுத் தலைவர் அதிக அக்கறை காட்டினார்: பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து ஏராளமான கேள்விகள் கேட்டார்," என்று குறிப்பிட்டார்.

ஜப்பானியப் பாராளுமன்றம் கலைக்கப்படுமா?

பொருளாதார நெருக்கடியும் கட்சிச் சண்டையும் காரணமாம்!

ஜப்பானின் ஆளும் கட்சியான லிபரல் கட்சி, இரண்டு உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து விலக்கிவிட்டது.

கடந்த சிலகாலமாக, லிபரல் கட்சியில்உள்ள சிலர் எதிர்க்கட்சியினருடன் சேர்ந்துகொண்டு, புதிய கன்சர்வேடிவ் கட்சி ஒன்றை அமைக்கத் திட்டமிடுகின்றனர்.

லிபரல் கட்சியிலிருந்து உறுப்பினர்கள் வெளியேற்றப்படுவது அதிகரித்தால், அக் கட்சியைச் சேர்ந்த 30-பேர், கட்சியைவிட்டு வெளியேறுவார்கள் என்றும், சுற்றுப் பிரயாணம் செய்யும் பிரதமர் யோஷிடா திரும்பிவரும்போது, 'டயட்' என்னும் ஜப்பானியப் பாராளுமன்ற கீழ்சபையில்; அவருக்குப் பெரும்பான்மை ஆதரவு இருக்காது என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பொருளாதார நெருக்கடி காரணமாக, இந்த ஆண்டு இறுதிக்குள் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

சோஷலிஸ்டு கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர், பாராளுமன்றம் கலைக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்று கருதுகிறார்களாம்.

தனியாகப் பறந்து செல்லுவதில் புதிய 'ரிகார்டு!'

மாக்ஸ் கான்ராட் என்ற விமானி, நியூயார்க்கிலிருந்து பாரிஸ் நகரத்திற்கு 22 மணி நேரத்தில் இரட்டை எஞ்சின் விமானம் ஒன்றில் தன்னந்தனியாகப் பறந்து வந்துள்ளார்.

தனியாக விமானத்தில் பறந்து செல்லுவதில் சார்லஸ் லிண்ட்பர்க் என்பவர் 1927-ம் ஆண்டு மே மாதத்தில் நியூயார்க்கிலிருந்து பாரிசுக்கு உள்ள 3,609 மைல் தூரத்தை 33 மணி 30 நிமிட நேரத்தில் பறந்து ஒரு 'ரிகார்டு' ஏற்படுத்தியிருந்தார்.

இப்போது, கான்ராட், அதே தூரத்தை 22 மணி நேரத்தில் பறந்து புதிய 'ரிகார்டு' ஒன்றை நிறுவியுள்ளார்.

அவர் 26 மணி நேரப் பிரயாணத்திற்குத் தேவையான பெட்ரோல் எடுத்துக் கொண்டு 18 முதல் 22 மணி நேரத்தில் பாரிஸ் சென்றுவிட தன்னால் முடியும் எனக்கூறிப் புறப்பட்டாராம்.

கான்ராட் இதுவரை 30,000 மணி நேரம் விமானமோட்டியிருக்கிறார்.

நான்காவது முறையாக இப்போது அட்லாண்டிக் கடலைத் தனியாகக் கடந்திருக்கிறார்.

அவர் ஏறிச் சென்ற, இரட்டை எஞ்சின் பொருத்தப்பட்ட விமானம் அமெரிக்கக் கம்பெனியால் தயாரிக்கப்பட்டதாம். அதில் உள்ள இரண்டு எஞ்ஜின்களும் 160 எச். பி. வேகமுடையனவாம்; மணி ஒன்றுக்கு 172 மைல் வேகத்தில் அந்த விமானம் செல்லக் கூடுமாம்.

அவர் விருப்பம்!

தூக்கிலிடப்பட்ட முன்னாள் பாரசீக அமைச்சர் உசேன் பதேமி, தனது மூன்று வயதுள்ள மகனுக்கு டாக்டர் முசாதிக்கை கார்டியனாக நியமித்து உயில் எழுதி வைத்திருக்கிறார்.

முன்னாள் பாரசீகப் பிரதமரான முசாதிக், இப்போது, தேசத் துரோகக் குற்றத்திற்காக விசாரிக்கப்படுகிறார்.

உடல் நலமில்லை என்றபோதிலும் உசேன் பதேமி, கொலைக் களத்தில் நிமிர்ந்த தலையுடன் நின்று துப்பாக்கிக் குண்டுகளை ஏற்றுக் கொண்டாராம்.

பதேமியின் இறுதி நேரம் பற்றி தெரிந்திருந்தும் கூட அவரது உறவினர்கள் யாரும் அவரைப் பார்க்க வரவில்லையாம்.

பதேமியின் முடிவு கேட்டு, அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் பேராசிரியராகப்பணியாற்றும் அவரது சகோதரர் 'மூர்ச்சித்து' விழுந்துவிட்டார் என்றும், அவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதென்றும் கூறப்படுகிறது.

வட்டார மொழி வளர்ச்சிக்கு அரசியல் சட்ட ஏற்பாடு

அதைத் தொடர்ந்து மொழிவழி மாநில அமைப்பும் கட்டாயமாகும்

பம்பாய் சட்டசபைத் தலைவர் விளக்கம்

" இந்திய அரசியல் சட்டப் பிரிவின் மூலம், வட்டார மொழிகளின் வளர்ச்சிக்கு உத்திரவாதம் கொடுக்கப்பட்டிருப்பதானது, மொழியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு மாநிலங்களைத் திருத்தி அமைக்கப்பட வேண்டிய கட்டாயத்தையும், தவிர்க்க முடியாத நிலையையும் உண்டாக்கி இருக்கிறது."

—மேற்குறித்தவாறு, பம்பாய் சட்டசபையின் தலைவராக இருக்கும் டி. கே. குந்தே அவர்கள் அறிவித்துள்ளார்.

குந்தே அவர்கள் மகாராஷ்டிர எல்லைக் குழுவின் தலைவரும் ஆவார்.

மேலும் அவர் சொன்னர் :—

"பம்பாயின் எல்லை ஓரத்தில் உள்ள தாணு மாவட்ட மக்கள், மிகவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் ; ஏனெனில், அப்போதுதான் அவர்கள் மராத்தி மொழி பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

இப்போது பல மொழி வழங்கும் பம்பாய் மாகாணத்தின் ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள்கூட, மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த வரையிலேனும் இந்த முடிப்படையை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

பம்பாய் நகரத்தையே தனி ராஜ்யமாக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்தவர்களே, இன்று, குஜராத்தி பல்கலைக் கழகத்தில், குஜராத்தியில் கல்வி போதனை செய்ய முற்பட்டிருப்பது காண மகிழ்கிறேன்.

சிறு மாநிலங்கள் அமைவது நல்லதல்ல ; அவை, மத்திய அரசாங்கத்திடம் அடிக்கடி பொருள் உதவி கேட்க வேண்டியவைகளாயிருக்கும் ; எனவே, மராத்தி மொழி வழங்கும் எல்லாப் பகுதிகளையும், பம்பாய் நகரையும் உள்ளடக்கிய ஐக்கிய மராத்தி மாநிலம் அமைக்க வேண்டுமென நாம் விரும்புகிருேம்."

கிழக்குப் பாகிஸ்தான் ஐக்கிய முன்னணியில் பிளவு !

கவர்னர்-ஜெனரலுக்கு வரவேற்புத் தருவதில் கருத்து வேறுபாடு !

கிழக்கு பாகிஸ்தான் ஐக்கிய முன்னணியில் முதன்முதலாக பிளவு தோன்றியிருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையை கவர்னர்-ஜெனரல் கலைத்தது குறித்து, ஐக்கிய முன்னணியினர் மகிழ்ச்சி தெரிவித்திருந்தனர்.

இப்போது கவர்னர் - ஜெனரல் குலாம் முகம்மது, கிழக்கு பாகிஸ்தானுக்கு வரும்போது - அவருக்கு வரவேற்புத் தரும் பிரச்சினையில் ஐக்கிய முன்னணியினரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாம்.

வரவேற்புக் குழு அமைப்பது குறித்து, முன்னணியில் பிளவு ஏற்பட்டு, ஒரு பகுதியினர் கூட்டத்தை விட்டு வெளியேறி தனிக் குழு அமைத்துக்கொண்டனராம்.

வெளியேறியவர்கள் ஐ. மு. சார்பில் முதன் மந்திரியாயிருந்த பஸ்லுல் ஹக் தலைமையில் ஒரு வரவேற்புக் குழு அமைத்தனர்.

கூட்டம் நடைபெற்ற ஐ. மு. அலுவலகத்திலேயே தங்கிவிட்டவர்கள், ஹக் மந்திரி சபையில் மந்திரியாயிருந்த ஆதா ரஹ்மான் தலைமையில் வேறு ஒரு வரவேற்புக் குழு அமைத்தனராம்.

இந்த இரண்டு குழுவினரும் ஒன்ருக இணைந்து கவர்னர் - ஜெனரலுக்கு வரவேற்புத் தருவதற்கான முயற்சி நடைபெற்று வருகிறதாம்.

மேற்கு பாகிஸ்தான் மாநிலங்கள்

ஒன்ருக இணைக்கப்படுவதற்கு எதிர்ப்பு !

'சிந்து அவாமி மகாஸ்' என்ற இயக்கத்தின் செயற்குழு தனது தீர்மானம் ஒன்றின் மூலம், மேற்கு பாகிஸ்தான் மாநிலங்களை ஒரே 'யூனிட்' ஆகச் சேர்ப்பதைக் கண்டித்துள்ளது.

மேற்கு பாகிஸ்தான் மாநிலங்கள் எல்லாவற்றையும் ஒன்ருக இணைக்கச் செய்யப்படும் முயற்சி மேற்கு பாகிஸ்தான் மக்களிடையே ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையும், மனக் கசப்பும் வளர வழிகோலுவதாகும்.

மேற்கு பாகிஸ்தானில் இப்போதுள்ள மாநிலங்கள்எல்லாவற்றிலும் சுதந்திரத்துடன் தனித் தனியாக இயங்கும் அதிகாரமுடைய ஒரு அரசியல் சட்டத்தை மட்டுமே சிந்து மக்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள்,"

என்றும், அத்தீர்மானம் கூறுகிறது. செயற்குழுவிற்கு ஷேக்-அப்துல் மஜீத் தலைமை தாங்கினர்.

அபிவிருத்தித் திட்டங்கள் தரும் பலன்

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது

"போதிய புள்ளி விவரங்கள் இல்லாத காரணத்தால் தேசீய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புதிதாக எத்தனை பேருக்கு வேலை கிடைத்தது என்பதைக் கண்டுபிடிக்க இயலவில்லை ; ஆனாலும், வேலை தேடித் தருவதற்கான நிறுவனங்கள் மூலமாகக் கிடைக்கும் குறிப்புக்களிலிருந்து, நாட்டில் வேலை தரும் நிலைமையில் அபிவிருத்தி ஏதும் ஏற்பட்டு விடவில்லை."

இவ்வாறு, புதுடில்லியில் நடைபெற்ற தேசீய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், நாட்டில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிப் பேசுகையில் மத்திய சர்க்கார் திட்ட மந்திரி நந்தா பேசினர்.

மேலும் அவர் பேசுகையில், சொன்னர் :—

'ஏ' பிரிவு மாநிலங்களிலிருந்து கிடைத்துக் கொண்டிருக்கும் தகவல்களிலிருந்து, நகரங்களிலும், கிராமங்களிலும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதைத் தான் காட்டுகிறது," என்ருர்.

காங்கிரசிலிருந்து விலக்கப்பட்டார்

பசுவதைத் தடுப்பு இயக்கத்தில் பங்கு பெற்றதே காரணமாம்

மேற்கு வங்காள பிரதேசக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ராம் சங்கர் திரிபாதி என்ற புர்ரா பஜார் மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவரை, பசுவதைத் தடுப்பு இயக்கத்தில் பங்கு பெற்ருர் என்பதற்காக, காங்கிரசிலிருந்து விலக்கிவைத்திருப்பதாக, பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

குஷ்ட நோய் பிடித்தவர்கள்

இந்தியாவில் 15 லட்சம் பேர் உள்ளனர்

இந்தியாவில் மொத்தம் 15 லட்சம் குஷ்டரோகிகள் இருக்கின்றனர். இவர்களில் 3,50,000 பேருக்குள்ள குஷ்டம் பிறருக்கும் தொத்தக் கூடியதாகும்.

இத் தகவலை, காந்தியார் நினைவு குஷ்டரோகக் கழகம் தந்திருக்கின்றது.

நாட்டில் குஷ்டரோகிகளுக்கான காலனிகள் 100 மட்டுமே உள்ளன. இவைகளில் சுமார் 15,000 பேர்கள் வதிகின்றனர். சுமார் 1000 மருத்துவ மனைகள், பலருக்கு சிகிச்சையளித்து வருகின்றன.

இந்த விபரங்கள் எல்லாம், சிகிச்சை கோரி வந்தவர்களைக் கொண்டு சேகரிக்கப்பட்டவை. 'நாட்டில், இன்னும் ஆராய்ந்து கணக்கிடப்படாத இந்த வகை நோயாளிகள் ஏராளமாக இருக்கக் கூடும்' என்றும் அந்தக் கழகத்தார் கூறியிருக்கின்றனர்.

'திட்டமிட்ட முன்னேற்றம் ஏற்படவில்லை'

'கல்வித்துறையில் பழைய முறைகளே நீடிக்கின்றன'

'ஐந்தாண்டுத் திட்டம் ஏட்டுச் சுரைக்காயாகிறது'

சுயமதிப்புரை தரும் திட்டக் கமிஷன் வருத்தம்

ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் காங்கிரஸ் அரசாங்கம் நாட்டில் செய்துவருவதாகக் கூறப்படும் பல திட்டங்கள் பயனற்றவை என்பதையும், எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதையும், திட்டக் கமிஷனின் ஆழ்வுக் குழுக்களின் அறிக்கைகள் கூறுகின்றன.

ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்விப் பிரச்சினைக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 41 கோடியில் சிறிதளவே செலவிடப்பட்டிருக்கிறது என்றும், கல்வி போன்ற முக்கியத் துறையில் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதையும் அவ்வறிக்கையில் எடுத்துக் காட்டப்படுகிறது.

1951—54 வரை இப்பிரச்சினைக்கு ரூ. 41·5 கோடி ஒதுக்கப்பட்டதாகவும், ஆனால் செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 8.7 கோடி என்றும் குறிப்பிடப்படுகிறது.

மத்தியத்துறையில் இதுபோன்ற நிலைகாணப்படும்போது, இராஜ்யங்கள், அனுமதிக்கப்பட்ட ரூ. 119.5 கோடியில் ஐம்பது சதவீதம் செலவழித்துவிட்டன என்று சொல்லப்படுகிறது. இப்படிச் செலவு செய்யப்பட்டது, இப்போதுள்ள கல்வி வசதிகளை அதிகப்படுத்துவதற்கே என்று தெரிகிறது.

கல்விப் புனர் நிர்மாணம் என்னும் திட்டம், இராஜ்யங்களில் அப்படியே அலட்சியப்படுத்தப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

பல தடவைகளில், மத்திய கல்வி அமைச்சராலயம் கூட்டங்கள் நடத்திய பின்னரும்கூட, ஆதாரக் கல்வி, சமூகக் கல்வி இவை எல்லாம் பழைய முறையிலேயே நீடிக்கின்றன என்று தெரிகிறதாம்.

உயர்நிலைப் பள்ளி கல்வி பற்றிய சீர்திருத்தத்திற்கு எவ்விதமான திட்டமும் தீட்டப்படவில்லையாம்.

திட்டக் கமிஷனின் அறிவுரைப்படி இல்லாமல், பல்கலைக் கழகங்களில் இப்போதுள்ளவசதிகள்நீடிக்கப்படுகின்றன. அவைகளில் கூட்டம் அதிகமாகவே இருக்கிறது. புதிய பாடத்துறைகள் ஆரம்பிப்பது, பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்துவது, புதிய முறைக்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது, குறுகிய நேர பயிற்சி வகுப்புகள் ஆரம்பிப்பது போன்ற துறைகளில் போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லையாம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், கல்வியைப் புனர் நிர்மாணம் செய்வதிலேயே அதிகக் கவனம் செலுத்தப்பட்டு, இரண்டாவது திட்டத்தில் தொடர்ந்து சரியான முறையில் கல்வி போதிக்க திட்டமிடப்பட்டிருந்ததாம்.

இப்போது முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற இன்னும் பதினைந்து மாதங்களே உள்ளன என்றும், ஆனல் இதுவரை எதிர்பார்க்கப்பட்ட காரியங்கள் நடைபெறவில்லையாதலால், இரண்டாது திட்டத்திற்கும் புனர் நிர்மாணம் செய்வதையே தொடர்ந்து நடத்த வேண்டியிருக்கும் என்றும் திட்டக் கமிஷன் கருதுகிறதாம்.

பல அதிகாரங்கள் மத்திய சர்க்காரிடம் இருப்பதால் இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் பல தடைகள் உள்ளன என்று அக்குழு கருதுகிறது.

பி. சோ. கட்சியின் தலைவலி திரு-கொச்சி மந்திரி சபையே!

சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை மதிக்கவில்லையாம் !

கட்சியின் போக்கு பற்றி லோகியா தரும் விளக்கம்!

"பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் பிளவுகளுக்கு முக்கிய காரணமாக உள்ள பிரச்சினை, திருவாங்கூர்-கொச்சி மந்திரி சபையாகும் ; ஒன்ருகக் கூட்டுச் சேர்ந்து பணியாற்றும் முறையில் பி. சோ. கட்சியினர் பலர், 'காங்கிரசும், கம்யூனிஸ்டு கட்சியும் ஒன்றே,' என்று கருதுகிருர்கள் ; சிலர், 'சேர்ந்து பணியாற்றுவதில், கம்யூனிஸ்டு கட்சியைவிட, காங்கிரஸ், குறைந்த குறைபாடுகளை உடையது', என்று கருதுகிருர்கள்.

"இப்படி காங்கிரசின் மீது சிறிதளவு அபிமானம் கொண்டவர்கள், திரு-கொச்சி மந்திரி சபை பதவியில் நீடிக்க வேண்டும் என்று விரும்புகிருர்கள். பிரஜா - சோஷலிஸ்டு கட்சியைப் பொறுத்த மட்டில், காங்கிரசையும், கம்யூனிஸ்டு கட்சியையும் ஒரே தூரத்தில் வைத்திருக்க வேண்டுமென்று நினைப்போர், திரு-கொச்சி மந்திரி சபை பதவியை விட்டுப் போக வேண்டும் என்று விரும்புகிருர்கள்,"

—இவ்வாறு, திரு-கொச்சி மந்திரி சபையின் பிரச்சினைதான், பி.சோ. கட்சியின் பிளவுகளுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கிறது என்று பி. சோ. கட்சியின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் ராம் மனேகர் லோகியா கூறியுள்ளார்.

காங்கிரசின் மீது பி. சோ கட்சிக்குள்ள தொடர்புக்கு, தன்னுடைய எண்ணங்களை ஒப்புக்கொள்ளும் வரையில், தான் கடுமையாகப் போரிடப்போவதாக அவர் கூறினர்.

கம்யூனிஸ்டுகளையும் காங்கிரசையும் ஒரேவிதமான எதிரிகளாகக் கருதுவோர், பி. சோ. கட்சியில் பெரும்பான்மையினராக உள்ளனர் என்றும், ஆனல், அவர்கள் கையிலே கட்சியின் தலைமைப் பீடம் இல்லை என்றும், லோகியா, மேலும் கூறியுள்ளார்.

அதே நேரத்தில், கம்யூனிஸ்டுகளைவிட காங்கிரசை, கொஞ்சம் தாம் குறைந்த எதிரியாகக் கருதி, அதனுடன் நட்புக் கொண்டாட வேண்டும் என்னும் கருத்துடையவர்கள் பி. சோ. கட்சியில் சிறுபான்மையினரே ; ஆனல், அவர்களிடம் கட்சியின் தலைமைப்பீடம் சிக்கிக் கொண்டுவிட்டது, என்று லோகியா மேலும் கூறுகிருர்.

* * *

பி. சோ. கட்சியின் மற்ருெரு தலைவரான ஆச்சாரியா நரேந்திர தேவ் பேசுகையில், காங்கிரசுடன் பி. சோ. கட்சியினர் கூட்டுச் சேர்வது என்பது இயலாது எனவும், கட்சியின் பெரும்பான்மையினர் இக்கருத்தையே கொண்டிருக்கின்றனர் என்றும் கூறியுள்ளார்.

காங்கிரசுடன் ஒத்துழைப்பது கூடாது என அலகாபாத் மாநாட்டிலேயே முடிவு செய்யப்பட்டதாகவும், தேசிய நெருக்கடியின்போது மட்டுமே ஒத்துழைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டதாகவும், ஆனல், இதுவரை காங்கிரசுடன் ஒத்துழைக்கும்படியான அவசியம் ஏதும் ஏற்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

★

காங்கிரசுடன் சேர மாட்டோம் !

மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் தலைவரான டாக்டர் ராம் மனேகர் லோகியா, நாகபுரியில் நடைபெறவிருக்கும் தனது கட்சிக் கூட்டத்தில், 'காங்கிரசுடன் ம. சோ. கட்சி ஐக்கியமாக வேண்டும்,' என்று மீண்டும் பேசுகிற துணிவு எவருக்கும் இருக்காது,' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

"நடக்க முடியாத ஒரு விஷயம் பற்றி ஓயாது பேசிக்கொண்டிருப்பதைப் போல, காங்கிரசும், பி.-சோ. கட்சியும் உண்மையாகவே ஒன்று சேர்ந்துவிடுவதென்பது கூட, அவ்வளவு தீமை பயப்பதல்ல" என்றும், "மக்களும், மக்கள் சோஷலிஸ்டு கட்சியும் நிர்மாணிக்க விரும்புகிற ஒரு சமுதாயத்திற்கு, காங்கிரசாரோ அல்லது கம்யூனிஸ்டுகளோ பொருத்தமில்லாதவர்கள்" என்றும் டாக்டர் லோகியா குறிப்பிட்டாராம்.

நேதாஜியின் மகள் !

நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் 14-வயது மகளான குமாரி அனிதா போஸ், இந்தியாவில் குடியேறி, ஒரு இந்தியரைப்போல் வாழ ஆவல் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கே. எஸ். பாண்டியன் நினைவு நாள் விழா

31–10–54 காலை 10 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில், தோழர் எம். கே. மணி தலைமையில் நடைபெற்ற "கே. எஸ். பாண்டியன் நினைவு நாள்" விழாவில், தோழர்கள் தி. தி. பாலு, மா. பா. சாரதி, ம. சண்முகனர், அ. கிருட்டிணன், சி. ராமன் ஆகியோர் கே. எஸ். பாண்டியன் ஆற்றிய அரிய பணியினைப் பற்றியும், கழக [illegible] வேலைகள் பற்றியும் பேசி[illegible]

'மத நம்பிக்கையை போக்க ஸ்தாபனரீதியான பிரசாரம் தேவை'

ரஷிய கம்யூனிஸ்டு கட்சி காரியதரிசியின் கருத்துரை

" பொறுமையுடன், ஸ்தாபனரீதியாக செய்யப்படுகிற பிரசாரம், மத நம்பிக்கை கொண்டுள்ள மக்களை, அவர்கள் செய்கிற தவறுகளிலிருந்து நிச்சயமாக விடுவிக்கும் ;

" மத நம்பிக்கையை, அதிகாரத்தைக் கொண்டும், பிறர் மனதைப் புண்படுத்தியும் அழித்துவிட முடியாது ; அம்மாதிரி செய்வது மூடபக்தியை மேலும் வளர்க்கவே உதவும்."

இந்தக் கருத்துக்களை, ரஷிய நாட்டில் மத நம்பிக்கை கொண்ட மக்களைத் திருத்துவதற்காக கம்யூனிஸ்டுகள் கையாளுகிற முரட்டுத்தனமான தவறுகளைக் கண்டிக்கும் வகையில் ரஷிய கம்யூனிஸ்டு கட்சியின் முதல் செயலாளரான நிகிதா க்ருஷ்செவ் அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளார்.

'பிராவ்டா' என்ற கம்யூனிஸ்டு கட்சியின் அதிகாரபூர்வமான இதழில் வெளிவந்துள்ள அந்த அறிக்கையில், க்ருஷ்செவ், ரஷியாவில், மத நம்பிக்கைக் கொண்ட மக்களின் மனதை நோகச் செய்யும் வகையில், மத எதிர்ப்பு இயக்கம் என்ற பெயரில், கம்யூனிஸ்டு கட்சியினர் செய்துவரும் 'மூர்க்கத்தனமான தவறுகளை'க் கண்டித்துள்ளார்.

" மத நம்பிக்கையில் அரசாங்கம் தலையிடுகிற நிலைமை கூடாது ;

" மத நம்பிக்கை ஒழிப்புக்காக பிரசாரம் மட்டும் தொடர்ந்து நடைபெறத்தான் செய்யும்,"

என்று, மேலும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"அம்மாதிரி, மக்களிடம் நடந்து கொள்ளுவது கட்சிக் கொள்கைக்கு முரண்பாடானது; மேலும், மக்கள் மனச்சாட்சிப்படி நடக்கிற உரிமை தந்துள்ள அரசியல் சட்டத்திற்கும் அது விரோதமானதாகும்," என்றும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

தி. மு. க. தோழர்கள் தீ மிதித்தனர்

" பரமக்குடியில், தீ மிதி உற்சவம் 1—11—54 மாலை நடைபெற்றபோது, நமது கழகத் தோழர்களான ஆர். கே. சின்னசாமி, இலட்சுமணன் ஆகியோர், கோவில் பூசாரி நெருப்பில் இறங்கு முன்பே நெருப்பில் இறங்கிக் காட்டினர்.

" 31—10—54 இரவு 10 மணியளவில் கோவில் நிர்வாகிகளில் ஒருவரின் சவாலை ஏற்றுக்கொண்டு தோழர் சின்னசாமி கரகம் இறங்கு முன்பே நெருப்பில் இறங்கினர் ; அதன் பிறகு தோழர் இலட்சுமணன் இறங்கினர்.

"தோழர் இலட்சுமணன், கோவில் நிர்வாகிகளால் கம்பால் நன்ருகத் தாக்கப்பட்ட நிலையிலும், தி. மு. கழகத் தோழர்கள் கண்ணியத்துடன் நடந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. இதையொட்டி கூட்டத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. இதை ஆதாரமாகக் கொண்டு சில தேசிய ஏடுகள் பெருங்கலவரம் நடைபெற்றதாகத் திரித்துக் கூறி தோழர்கள் மீது மாசு கற்பிக்க முனைந்துள்ளது," என்று பரமக்குடி தோழர் சி. வி. முத்துச்சாமி அறிவிக்கிருர்.

வேலை தேடித் - தரும் நிலையம்

மாநிலங்களின் பொறுப்பில் வரும்

இப்போது இந்திய சர்க்காரின் நேரடியான பார்வையில் இருக்கும் வேலை தேடித் தரும் நிலையங்கள், இனிமேல், மாநிலங்களின் பொறுப்பில் விடப்படலாம் என்று சென்னை தொழிலமைச்சர் கூறியுள்ளார்.

இதுபற்றி சமீபத்தில் புதுடில்லியில் நடைபெற்ற மாநிலத் தொழிலமைச்சர்கள் மாநாட்டில் யோசனை தெரிவிக்கப்பட்டது என்றும், இதுபற்றி சீக்கிரமே முடிவு செய்யப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதுவையில் இறக்குமதி

இந்திய சர்க்கார் கட்டுப்பாடுகள்

" நவம்பர் மாதம் 1-ந் தேதிக்கு முன்னல் இங்கு வந்துள்ள பொருள்களை, இந்தியாவில் இறக்குமதி செய்வது பற்றிய கட்டுப்பாடுகள் சிறிது தளர்த்தப்படும் ; அச்சாமான்களில், தற்போது தடை செய்யப்பட்ட பொருள்களைக்கூட, வரி செலுத்திவிட்ட பிறகு, அவை இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்படலாம். ஆனாலும், வரி செலுத்தினல் கூட, புதிய மோட்டார்கார்கள் இறக்குமதி செய்வது அனுமதிக்கப்படமாட்டாது,"

இவ்வாறு மத்திய சர்க்கார் வர்த்தக இலாகா கூட்டுச் செயலாளர் கே. பி. லால் தெரிவித்திருக்கிருர்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது :—

" இனிமேல் இங்கு வரும் பொருள்களுக்கு இறக்குமதி விதிகள் அமுலாக்கப்பட்டு வரி வசூலிக்கப்படும். பிரெஞ்சு சர்க்கார், அன்னிய செலாவணிக்கு வகை செய்து அனுமதியளித்திருந்தால், அது ஏற்றுக்கொள்ளப்படும் ; ஆனல் பிரெஞ்சு சர்க்காரின் அனுமதி பெருத பொருள்கள் இங்கு இறக்குமதி செய்யப்படுவது தடை செய்யப்படும்.

இத் தடை விதிகள், ஏற்கனவே மார்க்கெட்டுகளிலுள்ள வர்த்தகர்கள் 'ஆர்டர்' கொடுத்து இன்னும் வந்து சேராமல், இனி வந்துசேருவதாய் இருக்கும் பொருள்கள் மீதும் விதிக்கப்படும் ; அவற்றுள் தடை செய்யப்பட்ட பொருள்கள் இருந்தால் அவை அனுமதிக்கப்படமாட்டாது."

நகீப் பதவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது இரண்டாம் முறையாக அவரது 'அரண்மனை வாழ்வு' பறிக்கப்படுகிறது.

ஜெனரல் நகீப், 1952-ம் ஆண்டில், எகிப்திய மன்னராயிருந்த பரூக் என்பவரை விரட்டிவிட்டு, இராணுவ ஆட்சியை பிரகடனப்படுத்தினர்.

பின்னர் கர்னல் நாசர் பிரதம மந்திரியாக பொறுப்பேற்ருர். நகீப் குடியரசுத் தலைவரானர்.

முதன் முறை குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு மீண்டும் அவர் பதவியிலமர்த்தப்பட்டபோது கடந்த ஜுன் மாதத்தில், நகீப் குறிப்பிட்டார்—' எனக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை; நான் வெறும் குடியரசுத் தலைவர் மட்டும்தான் '—என்று !

இப்போது நாசர் மந்திரி சபையைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

அவரை, குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து இரண்டு 'மோட்டார் சைக்கிள்' வீரர்கள், பலத்த பாதுகாப்புடன் கெய்ரோவை அடுத்த சுற்றுப்புற நகரத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பதை நகீபிற்கு அறிவிக்க 'புரட்சிக் கவுன்சில்' அங்கத்தினர் இருவர் அனுப்பப்பட்டனர்.

நகீபின் எதிர்காலம் குறித்து இன்னும் எவ்வித அதிகார பூர்வமான அறிக்கையும் வெளிவரவில்லை.

முஸ்லீம் சகோதரத்துவக் கழகத்தைச் சேர்ந்த யூசுப் தலத், இப்ரஹீம் தாயெப் என்ற இரு 'பயங்கரவாதிகளும் கைது செய்யப்பட்ட பின், அவர்கள் தந்த தகவலின் பேரிலேயே, நகீப் குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டாராம்.

மாளிகையைவிட்டு வெளியேறிய நகீப், வெகு அமைதியாக, சாந்தம் தவழ புன்முறுவல் பூத்தமுகத்துடன் காணப்பட்டாராம்.

சட்ட விரோதமாக்கப்பட்டுள்ள முஸ்லீம் சகோதரத்துவக் கழகம் பற்றி, அரசாங்கத்திற்கும் தலைவர் நகீபிற்குமிடையில் பலத்த கருத்து வேறுபாடு இருந்தது என்று சொல்லப்படுகிறது.

காப்பி தோட்டங்களின் எண்ணிக்கை

இந்தியாவில், சுமார் 27,000 காப்பித் தோட்டங்கள் உள்ளன. அவற்றில் மொத்த விஸ்தீரணம் 2,81,350 ஏகரா ; அவற்றில் சுமார் 2,35,375 ஏகராவில் காப்பிச் செடிகள் பயிரிடப்பட்டுள்ளன.

'இரு நாடுகளின் பிரதமர்கள் சந்தித்துப்பேசவேண்டும்'

நட்புறவு வளருமென நம்பிக்கை

பாகிஸ்தான் உள்நாட்டமைச்சர் கருத்து

" மேற்கு பாகிஸ்தான் மாகாணங்களைக் கொண்ட ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்துவது பற்றியுள்ள பிரச்சினையில், 'ஆசாத் காஷ்மீர்' பகுதிகளைச் சேர்ப்பது என்பது கிடையாது,"

என, பாகிஸ்தான் உள்நாட்டு இலாகா அமைச்சரான இஸ்கந்தர் மிர்சாரா கூறியுள்ளார்.

ஆசாத் காஷ்மீர் சர்க்காருக்கு பாகிஸ்தான் சர்க்கார் அளித்துள்ள வாக்குறுதிகளின்படியே, தான் இவ்வாறு கூறுவதாகவும், அந்த வாக்குறுதி என்னவென்று தன்ஞல் கூறமுடியாது என்றும் அவர் மேலும் கூறினர்.

" காஷ்மீர் பிரச்சினையை ஐ. நா. பாதுகாப்பு சபையில் பாகிஸ்தான் வற்புறுத்தும் நோக்கத்தில் இல்லை," என்று கூறப்படுவது பற்றி அவரிடம் கேட்டபோது, "நாங்கள், மாற்று முடிவெதையும் செய்யவில்லை என்றும், பாதுகாப்பு சபையில் காஷ்மீர் பிரச்சினை ஏற்கெனவே இருக்கிறது என"வும் அவர் பதிலளித்தார்.

இப்பிரச்சினையிலும், இன்னும் இதர பிரச்சினைகளிலும் இந்தியாவுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகள் வைத்துக்கொள்ளவே பாகிஸ்தான் விரும்புகிறதென்றும், இப்போதைய நிலையில், தான், ஆசாத் காஷ்மீரின் உள்நாட்டுப் பிரச்சினையையே கவனிப்பதாகவும் கூறினர்.

" பாகிஸ்தான் பிரதமரும், இந்தியப் பிரதமரும் சமீபத்தில் சந்தித்துப் பேசுவதற்கான சந்தர்ப்பம் ஏதாவது உண்டா ?" என்று மீர்சாவிடம் கேட்டபோது, "அவர்கள் இருவரும் சந்தித்தால், தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும், அவர்கள் எவ்வளவு அதிகமாக சந்தித்துப் பேசுகிருர்களோ, அவ்வளவுக்கு அதிகமாக இரு நாடுகளுக்கும் இடையே நல்லெண்ணமும், நட்புறவுகளும் வளரும்" என்றும் அவர் கூறினர்.

சம்பளக் குறைப்பை எதிர்த்து பீடித் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

போலீசார் தடியடி; பலருக்குப் படுகாயம்!

சென்னை நகரிலுள்ள அமான் உல்லான் பீடி முதலாளியும், கரீம் பீடி முதலாளியும், தங்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்துவந்த பீடித் தொழிலாளருக்கு நாளொன்றுக்குக் கொடுத்துவந்த சம்பளம் ரூ. 1—10—0-வை ரூ. 1—6—0 ஆகக் குறைத்ததின் காரணமாக, மேற்படி தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு, தங்களுக்குக் குறைக்கப்பட்ட சம்பளத்தை மீண்டும் உயர்த்த வேண்டுமென்று கோரி, சென்ற 13-ந் தேதியன்று, தொழிற்சாலை முன் பாகக் கூடி, எதிர்ப்புக் கோஷங்களை முழங்கிக்கொண்டு மறியலில் ஈடுபட்டனர்.

அச்சமயத்தில், சில காலிகள், தொழிலாளர் மீது சோடா புட்டிகளை வீசியெறியவே குழப்பமேற்பட்டதாம் ; நிலைமையைச் சீர்படுத்தச் சென்ற போலீசார், கூடிநின்ற தொழிலாளர் மீது தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனராம்.

இந்தக் கலவரத்தின் விளைவாக சுமார் 70 பேருக்கு தலை, கை கால்களில் பலத்த அடிகள் பட்டுள்ளனவாம். 6 பேர்களுடைய நிலை மிகக் கவலைக்கிடமாயிருப்பதாகவும், காயமுற்ற சுமார் 60 பேர்களும் மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும், 37 தொழிலாளர்களை, அவர்கள் கலகம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டி, போலீசார் அவர்கள் மீது வழக்குத் தொடுத்திருக்கின்றனராம்.

தங்களுடைய சம்பளம் குறைக்கப்பட்டதும், தொழிலாளர்கள் யாவரும், தொழிற்சாலைகளின் உள்ளிருந்துகொண்டே வேலை நிறுத்தத்தை மேற்கொண்டதாகவும், பின்னர், தங்கள் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் முதலாளிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினரென்றும், அவர்கள் கோரிக்கைகளுக்கு முதலாளிகள் இணங்க மறுத்துவிட்டமையால், தொழிலாளர்கள் யாவரும் தொழில் அதிகாரி (லேபர் ஆபீசர்) யிடம் சென்று முறையிட்டதாகவும், அந்த அதிகாரி, தொழிலாளருக்குச் சம்பளத்தை உயர்த்த முதலாளியைக் கேட்டுக் கொண்டார் என்றும், அவரிடம் முதலாளி சம்மதம் தெரிவித்துவிட்டுப் பின் தொழிற்சாலைக்குச் சென்றபின் தொழிலாளரிடம், மீண்டும் சம்பளத்தை உயர்த்த முடியாதென்று மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆந்திரத்துடன் இணைய விரும்புகிருேம் என்று எழுந்துச் சொல்வதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஒரியர்கள் விரும்புவதேயாகும்' என்று கூறப்படுகிறது.

மேலும் அந்த அறிக்கையில், சம்பவத்தை ஒட்டி கைது செய்யப்பட்டவர்களை எல்லாம் விடுவிப்பதுடன் ஒரு பாரபட்சமற்ற குழுவின் விசாரணைக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் 28-ந் தேதியன்று 'சூரியா' என்ற பெயரில் ஒரு ஒரிய மொழி நாடகமும், 'தர்மசக்ரா' என்ற பெயரில் ஒரு தெலுங்கு நாடகமும் அப்பகுதி மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'சூரியா' என்ற ஒரிய நாடகம் கலவரம் ஏதுமின்றி நடைபெற்றது. ஆனல், 'தர்ம சக்கரம்' நடைபெற இயலவில்லை. ஒரிய மாணவர்கள் அந்த நாடகம் நடைபெற முடியாது கலவரம் செய்ய ஆரம்பித்தனர். உடனே தெலுங்கருக்கும் ஒரியருக்கும் சண்டை மூண்டது.

பின் 29-ந் தேதி மேலும் சண்டை வலுத்து அடிதடி நிலைமை உண்டானதை நிறுத்த போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். 29-ந் தேதி பர்லாகிமிடியில் 'கர்பியூ' உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நிலைமை சரிப்படுத்தப்பட்டது என்பதுதான் சம்பவம்.

தெலுங்கர் - ஒரியர் தகராறு!

ஒரியர்களே பலாத்காரத்தில் இறங்கினராம் !

ஆந்திரா, ஒரிசா எல்லையில் உள்ள பர்லாகிமிடி என்ற இடத்தில் ஆந்திரர்களுக்கும்—ஒரியர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்ட செய்தி ஏற்கனவே வெளிவந்திருந்ததல்லவா ?

அந்த சம்பவங்கள் பற்றி விசாரிக்க ஆந்திர காங்கிரஸ் நியமித்திருந்த இரண்டு பேர் கொண்ட குழு, சம்பவத்திற்கான காரணங்களை விசாரித்தறிந்து அறிக்கை ஒன்று தந்திருக்கிறது.

அந்த அறிக்கையில், ஒரியர்கள் தான் முதன் முதலில் பலாத்காரத்தில் ஈடுபட்டதாகவும், பல நாட்கள் அவர்கள் ஒரு பயங்கரமான சூழ்நிலையையே உருவாக்கியிருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிக்குக் காரணமெல்லாம், அந்த அறிக்கையின் படி, அந்தப் பகுதியில் பெரும்பான்மையினராக வாழும் தெலுங்கர்கள், பாசல் அலி தலைமையின் கீழ் பணியாற்றும் மாநில புனரமைப்புக் குழுவினரிடம், 'தாங்கள்

அரிசிச் சோற்றிடையே ஆண்டவன்

50 மூட்டை அரிசி தேவைப்படும்!

இராஜ இராஜ சோழன் கட்டிய தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத்திலுள்ள பிரகதீசுவரருக்கு 'மகா அன்னபிஷேகம்' நடைபெற்றிருக்கிறது. அன்னபிஷேகத்திற்கென தனியாக அமைக்கப்பட்ட குழுவினரின் பெருமுயற்சியால் அது நடைபெற்றதாம்.

11 மூட்டைகள் அரிசியை வடித்து அன்னபிஷேகம் செய்தும், லிங்கம் மூடப்படவில்லையாம்.

அந்த லிங்கத்தின் உயரம் 6 அடி எனவும், ஆவுடையார் 54 அடி சுற்றளவுடையது எனவும், பாணம் 9 அடி உயரமும், 23½ அடி சுற்றளவுடையதெனவும் கூறப்படுகிறது.

50 மூட்டைகள் அரிசி வடித்தால்தான் லிங்கத்திற்கான அன்னபிஷேகம் பூர்த்தியடையுமென்றும், உலகத்திலேயே இது இரண்டாவதான பெரிய லிங்கம் என்றும் கூறப்படுகிறது.

தாழ்த்தப்பட்டோர் சம்மேளன பொதுக் கூட்டம்

1—11—54 மாலை 6 மணிக்கு சென்னை பென்ஷனர் மைதானத்தில், ஆ. இரத்தினம் எம். எல். ஏ., தலைமையில், மேற்படி சம்மேளனத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்த மட்டில் அரசாங்கமும், தனி நிர்வாகங்களும் காட்டிவரும் பாரபட்சங்களைக் கண்டித்து தலைவர் பேசினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.